**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal procedure)

| | |
|---|---|
| **IN THE COURT OF** | Judicial Magistrate, Nanguneri |
| Calendar | |
| Miscellaneous | CC.No. 219/2016 |
| Preliminary register | |
| Sessions | |
| Deposition Of Witness for | Prosecution PW 6<br>Defense<br>Court |
| Name | திரு. சுப்பிரமணியன் |
| Husband Name / Father's Name | |
| Village | |
| Taluk | |
| Religion | Muslim/Christian/Hindu |
| Age | /2025 |

1 ம் மற்றும் 2 ம் *எதிரி ஆஜரில்லை குவிமுச பிரிவு 317 ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.*

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 16th day of May 2025.

நான் தற்போது 31.07.2019 ம் தேதி திருக்குறுங்குடி காவல்நிலையத்திலிருந்து பணிஓய்வில் சென்றுவிட்டேன். மூன்றடைப்பு காவல்நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியிலிருந்தபோது கடந்த 11.04.2016 ம் தேதி பகல் 13.30 மணிக்கு நானும் காவலர் 3150 பரமசிவம், காவலர் 562, காவலர் 564 ஆகியோர் சகிதம் மருதகுளத்திற்கு கிழக்கே உள்ள மாரியப்பன் என்பவரின் மரக்கடை முன்பு வாகன தணிக்கையின்போது மேற்கிலிருந்து கிழக்காக வந்த TN 72 AU 6728 வாகனத்தை தணிக்கை செய்யும்போது மருதகுளம் கீழதெருவை சேர்ந்த எதிரிகள் யோவான் மற்றும் டேனியல் ஆகிய இருவரும் எங்களை பணி செய்யவிடாமல் உடன் இருந்த காவலர் பரமசிவம் என்பவரை அவதூறான வார்த்தைகளால் பேசியும், இனிமேல் என்னுடைய வாகனத்தை மறித்தால் கொலைசெய்துவிடுவேன் என மிரட்டிவிட்டு சென்றனர். இதுசம்பந்தமாக உடன் இருந்த காவலர் 3150 பரமசிவம் என்பவர் மூன்றடைப்பு காவல்நிலையத்தில் புகார் மனு கொடுத்தார். இதுசம்பந்தமாக உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

வாகனதணிக்கை என்னுடைய தலைமையில் நடந்தது என்றால்

காவல் உதவி ஆய்வாளர் தலைமையில் நடந்தது. உதவி ஆய்வாளருடன் திரு.விஜய்சண்முகநாதன் முன்னிலையில் நடந்தது. வாகன தணிக்கை செய்யும்போது தடுப்பு அரண்கள் வைத்தீர்கள் என்றால் ரோடு சிறிய ரோடு என்பதால் தடுப்பு அரண்கள் வைக்கவில்லை. சம்பவயிடத்தில் எதிரிகள் வாகனத்தை நிறுத்திதான் என்னிடம் பேசினார்கள் என்றால் எதிரிகள் வாகனத்தை நிறுத்திதான் பேசினார்கள். எதிரிகள் என்னிடம் தங்களின் பெயர் விலாசம் ஆகியவற்றை கூறினார்கள். பின்னர் எதிரிகளை உடனடியாக கைது செய்து நிலையத்திற்கு அழைத்து சென்றோம்.

சம்பவயிடத்திலிருந்து எதிரிகளை எந்த வாகனத்தில் அழைத்து சென்றீர்கள் என்றால் எதிரிகள் வந்த வாகனத்தில் எதிரிகளுடன் ஒரு காவலர் காவல்நிலையத்திற்கு வந்தார். நான் எனது இருசக்கர வாகனத்தில் காவல்நிலையத்திற்கு வந்தேன். சம்பவத்திற்கு பிறகு நான் வேறு பணிக்கு சென்றேனா என்றால் இல்லை. நான் சொல்வது போல வழக்கு சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. எதிரிகள் இருசக்கர வாகனத்தில் வந்தபோது உதவி ஆய்வாளருக்கும் எதிரிகளுக்கும் வாக்குவாதம் நடைபெற்றது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. உதவிஆய்வாளரின் தூண்டுதலின்பேரில் பொய்யாக வழக்கு பதிவுசெய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.